<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>

<u>நாள் – 21.08.2025</u>

**MCOP.25/2020**

**ம.சா.1 திரு.முருகேசன்**

**ம.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. விபத்து நடந்தது சம்பந்தமாக போலிசில் யார் புகார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். வண்டி வந்து மோதியதாக சொல்லியுள்ளேன் அதன் பதிவு எண் என்ன என்றால் அது எனக்கு தெரியவில்லை, விபத்து நடந்தவுடன் நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் எந்த வண்டி மோதியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் TN29BX9557 என்ற வாகனம் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ள ம.சா.ஆ.3 பதிவு சான்றிதழில் எந்த வாகன எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் TN29BX9551 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ம.சா.ஆ.4 இன்சூரன்ஸ் பாலிசி ஒப்படைத்துள்ளேன் அது எந்த வண்டிக்கு உரியது என்றால் TN29BX9551 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் விபத்தின்போது ஓட்டிச்சென்றதாக சொல்லும் வாகனத்தின் பதிவு எண்

TN24A5660. அந்த வண்டி யாருடைய வண்டி என்றால் அது என்னுடைய வண்டிதான் வேறு நபர்களிடம் இருந்து விலைக்கு வாங்கினேன். அந்த வாகனம் என்னுடையது என்பதை காண்பிக்க பதிவு சான்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டிச்சென்ற வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு காண்பித்தேனா என்றால் காண்பித்தேன் அதனுடைய அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. இந்த வழக்கில் போலிசார் விசாரித்து தயார் செய்த இறுதி அறிக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல விபத்து நடக்கவில்லை அதனால் தான் நான் ஓட்டிச்சென்ற வாகனத்தின் மோட்டார்வாகன ஆய்வாளர் அறிக்கையையும் அதேபோல விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தன் மோட்டார்வாகன ஆய்வாளர் அறிக்கையையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்திற்கும் இந்த விபத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, அதனால் தான் முன்னுக்கு பின் முரணான வாகனத்தின் பதிவு எண்களை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் புலன் விசாரணைக்கு பிறகு நான் கொடுத்த புகாரில் சங்கதியை பொறுத்தமட்டில் பிழை என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. போலிசார் தாக்கல் செய்த இறுதி அறிக்கையை தாக்கல் செய்தால் எனக்கு எதிராக இருக்கும் என்பதால் அதனை இந்த வழக்கில்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும் இந்த விபத்துக்கு எந்தவித சம்மந்தமும் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.08.21 17:27:06 +0530